

அம்மா

'அம்மா' என்றொரு தமிழ் வார்த்தை, அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை. கருவாக்கி பின் உருவாக்கித் தியாகத்தில் தன்னை மெழுகாக்கிக் கொள்பவளாக இருப்பவள் அம்மா!

மண்ணில் மலர்ந்த எந்த ஒரு ஜீவனும் முதலில் அறிந்து கொள்வது அம்மாவை. எனவேதான் அம்மாவுக்கு முதலிடம் தந்துள்ளோம்.

'அம்மா' என்னும் சொல்லின் கடைசி எழுத்து 'மா'. தாய் என்னும் சொல்லின் முதல் எழுத்து தா. இரண்டும் சேர்ந்து 'மாதா' என்று ஆனது.

அம்மா, அன்னை, மாதா, தாய் என எப்படியும் அன்புடன் அழைக்கலாம். எல்லோருடைய இடத்தையும் ஒரு தாய் நிரப்ப முடியும். ஆனால் தாயின் இடத்தை நிரப்ப எதுவாலும் - யாராலும் முடியாது. தாய்க்கு இணை தாய்தான். மண்ணில் நம்மை நல்லபடியாக வாழ வைப்பவளும், நானிலத்தில் நம்மைப் புகழ்பெற்றுச் சிறக்கச் செய்பவளும் நம் தாய்தான்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என நாம் வணங்கும் வரிசையில் கூட அன்னைக்குத் தான் என்றுமே முதலிடம்! நமக்குக் கண்கண்ட தெய்வம் அவள். 'ஈன்றாளோடு எண்ணக் கடவுளுமில்லை' என்கிறது ஒரு பழம் பாடல். ''தாயான தத்துவனைத் தானே உலகேழும் ஆயானை, ஆள்வானைப் பாடுங்காண் அம்மானாய்'' என்கிறார் மணிவாசகர். அன்பு, அடக்கம், பண்பு, பதிவு, பக்தி, இரக்கம், ஈகை, தியாகம் இவை அத்தனையின் மொத்த உருவம்தான் தாய்.

அனைவரையும் அரவணைத்து அன்பு ஊட்டிச் சிறந்து விளங்கியவர்களுள் அன்னை சாரதாதேவியாரும், அன்னை தெரஸாவும் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

2000-வது ஆண்டின் 'வீரத்தாயாக' காமருன் நாட்டைச் சேர்ந்த 18 குழந்தைகளைப் பெற்ற ஆன்ஓயா (52) என்பவரைத் தேர்வு செய்தனர். காரணம், தானே விவசாயம் செய்து அந்த 18 குழந்தைகளையும் வளர்த்து வந்துள்ளார்.

உலக மொழிகள் பெரும்பாலானவற்றில் 'அம்மா' எனக் குறிக்கும் சொல் M (எம்) என்ற ஒலியுடன் தொடங்கும்படியாக உள்ளது.

தாயின் பெருமையை லாங்டேல் இப்படி கூறுகிறார் : '' உலகம் முழுவதையும் ஒரு தட்டிலும், என் தாயை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தினால் உலகின் தட்டுதான் மேலே இருக்கும்!''

''10 ஆசிரியர் ஒரு குருவுக்குச் சமம்; 100 குருவுக்கு ஒரு தந்தை சமம்; 1000 தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்'' என்கிறது மனுநீதி.

தாயின் தியாகம் மிக மிகப் பெரியது. ஒரு தாய் தன் குழந்தைக்காக தன்னையே விளக்காக்கிக் கொள்கிறாள். கையைத் தொட்டிலாக்குகிறாள், ரத்தத்தைப் பாலாக்குகிறாள்.

தந்தை ஒதுக்கலாம், தங்கை வெறுக்கலாம், கட்டிய கணவன் மனைவியைக் கைவிடலாம். ஆனால் தாய் கைவிடமாட்டாள். தாய்ப் பாசத்திற்கு மட்டும் ஐந்தறிவு ஆறறிவு என்ற பேதமே கிடையாது.

யானை, தான் ஈன்ற குட்டி மட்டுமல்ல எந்தக் குட்டியானை - எது எதிர்பட்டாலும் பால் கொடுக்கும்.

தாய்ப் பாசம் அதிகம் உள்ள பிராணி 'பூனை' தான்!

இறைவன் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது. ஆகவேதான் அவன் தாயைப் படைத்தான். பேய் பிள்ளையானாலும் தாய் தள்ளி விட மாட்டாள். ஒரு சேயைத் தாய்தான் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு குழந்தை, இரு தாய்மார்கள் - உரிமை கொண்டாடுகிறார்கள். மன்னன் சாலமனிடம் இவ் வழக்கு வருகிறது. 'அக் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்குப் பாதியாகக் கொடு!' எனக் கட்டளையிடுகிறான், மன்னன். 'வேண்டாம் மன்னா, முழு குழந்தையையும் அவளுக்கே கொடுத்து விடுங்கள்' என்று கதறுகிறாள்,

அதில் ஒரு பெண். அவள்தான் அந்தக் குழந்தையின் தாய் என்று மன்னன் எளிதாக முடிவு செய்துவிடுகிறான்.

இருக்கும் பிடி சோறு தனக்கென எண்ணாமல், அதனையும் கொடுக்கின்ற கருணை உள்ளம் படைத்தவள் தாய். அம்மா என்பது எல்லா உயிர்களுக்கும் கிடைத்த அற்புதம் - அமிர்தம்!

ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமம்.

வில்மா ரூடால்ப் என்ற 4வயதுச் சிறுமி நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டாள். இடது கால் செயலிழந்து விட்டது. அவளை ஊக்கப்படுத்தினாள், உற்சாகப் படுத்தினாள், அவள் தாய். பின் படிப்படியாக நடக்க வைத்து ஓட விட்டாள். எதுவரை? 1960ம் வருட ஒலிம்பிக்கில் 100 மீ 200 மீ 400 மீ ரிலேவில் தங்க மெடல் வாங்கும் வரை! ஒரு தாய் நினைத்தால் தன் மகளை - மகனை உலகம் புகழும் அளவுக்கு உயர்த்திக் காட்ட முடியும் என்பதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?

தன் பிள்ளையை, எந்தத் தாய் சொந்தக் காலில் நிற்க கற்றுத் தருகிறாளோ அவளே சிறந்த தாய்.

தாய் இல்லா வீடு வீடாகாது. தாய் இருந்தால் வீட்டில் எல்லா நன்மைகளும் தானாக உண்டாகும். உண்மையான 'அம்மா' வீட்டில் ஒரு போதும் சும்மா இருப்பதில்லை.

'தாய் மொழி' என்றும், தாய் நாடு என்றும் நாட்டையும் கூட தாயாக மதித்து வணங்குவது நம் மரபு.

ஒவ்வொரு ஆண்டும், மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை அன்னையர் தினமாக அகிலமெங்கும் கொண்டாடப்படுகிறது. ''அன்னையர் தினத்தைப் பரவலான முறையில் அறிமுகம் செய்த பெருமை அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜாரிலியாவார்ட் ஹோ' அவர்களையே சாரும். முதலில் அன்னையர் தினத்தை 1910-ல் அங்கீகரித்தனர்.

ஸ்பெயின் நாட்டு மக்கள், தாயின் பெயரை இனிஷியலாகப் பயன் படுத்துகிறார்கள். அயல் நாடுகளில் பல பல்கலைக் கழகங்களில் இந்த முறை உண்டு. கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் போது, தந்தை பெயருடன் தாயின் பெயரையும் குறிப்பிட வேண்டும். இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும் என்று சென்னை முன்னாள்

பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மனோகர் மே 1998ல் தெரிவித்தார். விரைவில் அது நடைமுறைக்கு வரவேண்டும்.

காக்கைக்குத் தன் குஞ்சும் பொன் குஞ்சு!

உலகில் அழகு மிக்க குழந்தை ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதை ஒவ்வோர் அன்னையிடமும் காணலாம்.

உலகக் குத்துச் சண்டை வீரர் முகமது அலியின் தாயார் மற்ற வீடுகளில் சமையல் வேலை செய்து தன் மகனை வளர்த்து, உலகக் குத்துச் சண்டை வீரன் எனப் பெருமைப் படுத்தினார்.

'' நல்ல மாற்றாந் தாய்க்கும் சொர்க்கத்தில் தங்கநாற்காலி உண்டு'' என்கிறது இஸ்ரேலியப் பழமொழி.

முன்னாள் அமெரிக்க அதிபர் ஆப்பிரகாம் லிங்கன் 10 வயதாக இருக்கும் போது தாய் இறந்துவிட்டாள். புது அம்மா சாரா புஷ், லிங்கனின் வாழ்க்கையில் புது வசந்தம் தந்தார். ஆம், லிங்கனை முதன் முறையாகப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

பின்பு ஒரு முறை லிங்கன், ''இன்றைய என் நிலைக்கும், அடையப் போகும் எதிர்கால நிலைக்கும் என் தெய்வீகத் தாய்க்கே நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்!'' என்றார். இதை மாற்றாந்தாய்மார்கள் உணர வேண்டும்.

அதிக பாசமுள்ள பிராணி பூனை என்றால், பாசமற்ற ஒரு பிராணி முயல். காரணம் அது தன் குட்டிக்கு சரிவர பாலூட்டாது.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் எனும் நோக்கில் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரவலாக்கி ஆழப்படுத்துவதற்காக 1990 முதல் ஆகஸ்டு முதல் வாரம் உலகம் முழுக்க தாய்ப்பால் வாரமாகக் கொண்டாடப்படுகிறது.

''குழந்தைக்குத் தாய்ப்பாலைக் கொடுப்பவள் காவிய அன்னை ஆவாள்'' என்கிறது ஜெர்மானியப் பொன்மொழி.

பால் கொடுப்பது தாயின் கடமை என்று சொல்வார்கள். ஆனால் இப்போது தாய்ப்பால் கொடுப்பது தாயின் உரிமை என்கிறார்கள்.

குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்திக்கான ஊட்டச்சத்து கிடைப்பது, தாயப் பாலில் மட்டுமே. குழந்தையின் மூளை வளர்ச்சியும் தாய்ப் பாலின்

மூலமே சிறப்பாக நடக்கிறது. நதி நீருக்காக ஏங்குவது போல குழந்தை தாய்ப் பாலுக்காக ஏங்கக் கூடாது.

தமிழ்நாட்டின் தாய்ப்பால் வங்கி மதுரை மாநகரில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இன்று நமது பெண்கள் தன் குழந்தைக்குத் தாய்ப் பால் தருவதில்லை என ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. ஒரு தாய் காட்டும் பாசமும் பரிவும் பாலும் குழந்தைக்கு மிகப் பெரிய பலமான அடித்தளம். பலமான அடித்தளம் போட்ட கட்டடம் மட்டுமே உறுதியாக நிமிர்ந்து நிற்கும். அதுபோல போட்டிகள் நிறைந்த இவ்வுலகில் எந்தச் சவாலையும் எதிர்த்து நிற்கும் சக்தியைக் கொடுக்க குழந்தைக்கு தாய்ப்பால் அவசியம்!

மாறாக புட்டிப்பால், மாட்டுப் பால் கொடுப்பதால் குழந்தைகளின் உடல் நலம் குன்றி ஆண்டுக்கு 2 லட்சம் குழந்தைகள் இறக்கின்றனர். மேலும் வயிற்றுப் போக்கு, உடல் - மூளை, வளர்ச்சிக்குறைவும் ஏற்படுகிறது. தாய்ப்பால் தந்தால், வருடத்தில் ஏழு ஆயிரம் கோடி மாற்று உணவுக்காகும் செலவு மிச்சமாகும்.

தாயின் கருவிலிருந்து வெளிவந்த குழந்தைக்குத் தாயே பிரபஞ்சம். பிறந்த குழந்தைக்கு ஒரு வருடம் தாய்ப் பாலைத் தவிர வேறு பாலை உணவாகத் தரக் கூடாது. தண்ணீர் கூட கொடுக்கத் தேவையில்லை என்கிறது உலக சுகாதார நிறுவனம். அதிலும் குழந்தை பிறந்தவுடன் வருகிற சீம்பாலைக் கண்டிப்பாகக் குழந்தைக்குத் தர வேண்டும்.

பிறந்த சிசு தாய்ப்பாலையே ஜீவாதாரமாக தாயையே நம்பி வாழ்க்கையைத் தொடங்குகிறது.

மனித வாழ்க்கையில் பிறந்த முதல் இரண்டு ஆண்டுகள் மிக முக்கியமானதாகும். இந்த சமயத்தில் குழந்தையின் வளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருக்கிறது. மூளை வளர்ச்சி 30% இப் பருவத்தில் ஏற்படுகிறது.

தாய்ப்பாலுக்கு மாற்றாக வேறு ஏதாவது உணவு அட்டவணையைப் பரிந்துரைத்தால் அது மரணப் பத்திரமாக அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

'தாயா? தாரமா?' என்ற குழப்பம் சில குடும்பங்களில் இருக்கும். தாய்க்குப் பின் தாரம் என்பதே சரி. ஒருவனின் தாய், அவன் மனைவிக்குப் பேய்.

''நீங்கள் நன்றாக இருந்தால்தான் நாங்கள் நன்றாக இருக்க முடியும்'' என்பவள் மனைவி. '' நீ எங்கே இருந்தாலும் நன்றாய் இருக்க வேண்டும் அதுவே எனக்குப் போதும்'' என்பவள்தான் தாய்.

வேரை விட ஒரு மரத்தில் எந்தக் கிளையும் முக்கியமில்லை. அதுபோல தாயை விடச் சிறந்த குடும்ப அங்கத்தினர் இல்லை. தாய் ஒரு குடும்ப மரத்தின் வேர் போன்றவள்.

"தாய் மகனின் வயிற்றைப் பார்ப்பாள், மனைவி கணவனின் மணிபர்சைப் பார்ப்பாள்" என்று ஒரு பழமொழி உண்டு. உண்மைதானே! கணவனின் வருமானம் குறைந்துவிட்டால் வீட்டில் தீபாவளி வெடி அல்லவா வெடிக்கும்?

மனிதனைவிட மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உயர்ந்த அறிவு உள்ளது. தாய்மை விஷயத்தில் உண்ணும் உணவு செரிக்க இரைப்பையில் சில என்சைம்கள் அவசியம் தேவை. இது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பொருந்தும். விதிவிலக்காக ஓநாய்க் குட்டிக்குமட்டும் இறைச்சியைச் செரிமானம் செய்யக் கூடிய என்சைம்கள் இல்லை என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஓநாய் தம் குட்டிகளுக்கு மாமிச உணவை வழங்குவதற்கு முன்பு, இரையை விழுங்கி தம் இரைப்பையில் வைத்திருந்து, செரித்த பின்பு வெளியே எடுத்து அரைகுறையாக செரிமானம் அடைந்த இரையை திரவங்களுடன் சேர்த்து தங்களது குட்டிகளுக்குத் தருகின்றன.

கலப்பட மில்லாததும், பிறரால் களவாடப்பட முடியாததும், தனக்கு நிகர் ஏதும் இல்லாததுமான தாய்ப்பால் பல பச்சிளம் குழந்தைகளுக்கு அரிய மருந்து என்பதால் 'பிளட் பாங்க்' போல இப்போது கலிபோர்னியாவில் தாய்ப்பால் பாங்க் துவக்கப்பட்டு உள்ளது. இங்கு தாய்ப்பால் சேமித்து வைக்கப்பட்டு தேவைப்படும் குழந்தைகளுக்கு இந்தத் தாய்ப்பால் வழங்கப்படுகிறது. மற்ற நாடுகளிலும் இது போன்று விரிவு படுத்தப்பட உள்ளது.

எங்கும் - எதிலும் - எப்போதும் தாய்க்கே முதலிடம் தருகிறோம். அதை நாம் பேசும் மொழியில், நாட்டிலும் கூட நாட்டுகிறோம். தாயகம் - தாய் நாடு - தாய் மொழி - தாய்ப் பத்திரம் என்று தாய் என்பதை முதன்மை என்ற பொருளில் வழங்குகிறோம்.

2002 ஆம் ஆண்டு உலகத் தாய்ப்பால் வாரத்தின் மையக் கருத்து ''ஆரோக்கியமான தாய்- சேய்'' என்பதாகும்.

தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் நான்கில் ஒரு குழந்தையின் எடை இரண்டரைக் கிலோவுக்கும் குறைவு. எனவே தாய் ஆரோக்கியமாக இருப்பது மிக மிக அவசியம்.

தாய்மார்களுக்கும் ஒரு நற்செய்தி. அபார அறிவுத் திறனுள்ள குழந்தைகளைப் பெற்றெடுக்க கருவுற்ற தாய்க்கு டி. ஹெச்.ஏ. ஊட்டச் சத்து அளிப்பது மிகவும் அவசியம் என மருத்துவ ஆய்வில் கண்டறியப்படுள்ளது. பொதுவாக கருவுற்ற தாய் போதிய ஊட்டச் சத்து இன்மையால் பாதிக்கப்படும் நிலை தொடர்கிறது. கருவுற்ற தாய்க்கு இரும்புச் சத்து, கால்சியம், டி. எச். ஏ ஊட்டச்சத்து முதன் முறையாக வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த வகையான ஊட்டச்சத்து மாத்திரைகளாகவும், ஊட்டச்சத்து கலந்த பானங்களாகவும் பெண்களுக்குத் தரப்படுகிறது. கடலுக்கு அடியில் வளரும் ஆல்கே எனப்படும் கடற் தாவரங்களிலிருந்து இந்த ஊட்டச் சத்து தயாரிக்கப்படுகிறது.

நரம்பியல் பார்வைத்திறன் மற்றும் பிறவிக் கோளாறுகள் இல்லாமல் குழந்தை பெறுவதற்கு டி. எச். ஏ. ஊட்டச் சத்து மிகவும் அவசியம். மேலும் பிறவிக் குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க 'போலிக் ஆசிட் மாத்திரைகள்' தினமும் உட்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அறிவியல் வளர்ச்சி இன்று எங்கோ சென்று கொண்டிருக்கிறது.

''சாலோடு தண்ணீர் சாய்ச்சுக் குடித்தாலும் தாய் வார்க்கும் தண்ணீர்தான் தாகம் தணிக்கும்'' என்பார்கள்

உலகில் மனிதர்களானாலும் சரி, பறவைகளானாலும், விலங்குகளானாலும் சரி - தாய்ப்பாசம் மட்டும் பொதுவானது. இதில் சில தாய்மார்கள் மட்டும் விதிவிலக்கு.

''தாயே உன் மார்பில் பால் இல்லையென்றால் வடித்த கஞ்சியாவது எனக்குக் கொடு, நான் உயிர் வாழ்வேன். ஆனால் கள்ளிப்பாலை மட்டும் கனவிலும் எனக்குக் கொடுக்க நினைக்காதே தாயே'' என பல பிஞ்சு ஆத்மாக்கள் கெஞ்சும் நிலை இன்று உள்ளது.

ரஷ்ய டென்னிஸ் வீரர் 'மாரட் மிகைலோவிச் சாஃபின்' 2005-ல் ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிசில் வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றினார். இந்த வெற்றிக்கு வித்திட்டவர் அவர் தாய்தான்.

1980-ல் டென்னிஸ் குடும்பத்தில் இவர் பிறந்தார். நம் குழந்தைகளுக்கு நடை வண்டி வாங்கித் தருவோம் எழுந்து நடக்க! ஆனால் இவர் தாய் ரூசோ, எழுந்து நடக்க டென்னிஸ் மட்டையைத்தான் வாங்கித் தந்தார். அதைக் கொண்டுதான் அக் குழந்தையும் நடக்கத் தொடங்கியது. பின் டென்னிஸ் ஆடத் தொடங்கியது.

தாய் ரூசோ ரஷ்யாவின் டாப் 10 டென்னிஸ் வீராங்கனைகளுள் ஒருவர். தாயைப் போலதான் அவள் பிள்ளை சாம்பின்! பின் நாளில் தன் தாயையும் மிஞ்சிவிட்டார். இதை எழுதும் போது அவருக்கு டென்னிஸில் உலக அளவில் தரவரிசையில் 4 வது இடம் கிடைத்துள்ளது.

உலகில் தவறான பெண் இருக்கலாம். ஆனால் தவறான தாய் ஒருபோதும் இருக்க முடியாது!

ஆழம் காண முடியாத இனிமை - பிரிக்க முடியாத பந்தம் - நிழல் காண முடியாத புனிதம் - இவையும் இன்னும் எவ்வளவோ சேர்ந்தது தான் தாய்மை.

"ஈன்று புறந்தருதல் மட்டுமே தாயின் கடமை, சான்றோன் ஆக்குதல் தந்தை செய்ய வேண்டிய கடமை'' என்று புறநானூற்றில் சொல்லப்பட்டுள்ளது போல் இப்போது கருத முடியாது. எல்லாவற்றிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவே தந்தைக்கு இணையாக தன் குழந்தைக்கு அறிவை வளர்ப்பதில் தாயும் இணையாக இருக்கிறாள்.

ஒரு குழந்தையின் எதிர்காலத்தை அதன் செயல்களில் மட்டும் கண்டு பிடித்து விட முடியாது. அதை வளர்க்கும் தாயைப் பற்றி அறிந்த பிறகுதான் கூற முடியும்.

அண்ணனின் மனைவி, ஆசிரியரின் மனைவி, அரசனின் மனைவி, மாமியார் ஆகிய நால்வரும் நம்மைப் பெற்றெடுத்த தாய்க்குச் சமமானவர்களே என கூறுகிறது நீதி வெண்பா.

சென்னையைச் சேர்ந்தவர்கள் காந்திலால் - சுசிலா என்ற தம்பதிகள். இவர்களுக்கு திருமணம் ஆகி 3 ஆண்டுகள் ஆகிறது. 2 மாத ஆண் கைக் குழந்தை உள்ளது. குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவ மனைக்கு மோட்டார் சைக்கிளில் கணவன்

- மனைவி செல்கிறார்கள். வழியில் பிரேக் பிடிக்காமல் எதிரே வந்த ஒரு பஸ் மோதவர உடனே அந்தத் தாய், தான் இறந்தாலும் பரவாயில்லை, தன் குழந்தை காப்பாற்றப்படவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் சமயோசித புத்தியுடன் குழந்தையை பிளாட்பாரத்தில் வீசி காப்பாற்றியுள்ளார், அந்தத் தாய்!

'தாய், தாய்தான். தெய்வம் கூட தாய்க்குக் கீழ் தான்' என்பதை இந்த நிகழ்ச்சி உணர்த்துகிறது.

சமூகக் கல்வி என்பது 'குழந்தை' தாய் வயிற்றிலிருந்து பிறந்ததும் தொடங்கி விடுகிறது. ஒரு குழந்தைக்கு, தாய்தான் முதல் ஆசிரியர். எனவே தாய் என்பவள் ஒருவனின் உடலுக்கும் உயிருக்கும் தாயாவது போல் அறிவுக்கும் அவள் தாயாகிறாள்.

எல்லா உறவையும் விட, தாயின் உறவு முதன்மையானது. புனிதமானது; மகத்துவம் வாய்ந்தது. இதை உணர்த்தத்தான் நம் முன்னோர்கள் 'தேரோடு போச்சு திருநாள்; தாயோடு போச்சு பிறந்தகம்' என்றார்கள்.

ஒரு தாய் தன் வேலையில் அல்லது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் தன் குழந்தை லேசாகச் சிணுங்குவதைக் கேட்டால்கூட குழந்தைக்கு பசி எடுக்கிறது என்று உணர்ந்து துடிப்புடன் எழுந்து விடுவாள்.

குழந்தை பிறந்தவுடன் அதன் விழித்திரை பாதிப்புக்கு உள்ளாகாமல் இருக்க கர்ப்ப காலத்தில் 'வைட்டமின் ஏ' சத்து நிறைந்த உணவுகளைத் தாய் தொடர்ந்து சாப்பிட வேண்டும். கர்ப்ப காலத்தின் கடைசி மாதங்களிலும் குழந்தையின் பருவத்தின் போதும் விழித்திரை வேகமாக வளரும். இந்நிலையில் விழித்திரையின் வளர்ச்சிக்கு 'டீ எச் ஏ' என்ற திரவ வேதிப் பொருள் உதவுகிறது. இத் திரவப் பொருள் உணவு மூலமாக வெளிப்படுகிறது. விழித்திரையின் முறையான வளர்ச்சிக்கு இந்த வேதிப் பொருள் உதவ வைட்டமின் ஏ சத்து உணவு தாய்க்கு மிகவும் அவசியம். எனவே கேரட், முருங்கைக் கீரை, கறிவேப்பிலை, மீன் ஆகியவற்றை உணவில் தொடர்ந்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மத்திய பிரதேசம் ஜபல்பூர் பற்கி கிராமத்தைச் சேர்ந்தவர் கைலாஷ்கிரி பிரம்மச்சாரி. வயது 43. கைலாஷ்கிரி விறகு வெட்டுவதற்காக ஒரு மரத்தில் ஏறிய போது எதிர்பாராத விதமாகக் கீழே விழுந்த அவருக்கு கை எலும்பு முறிந்தது. இதைக் கண்ட அவாது தாய்

கீர்த்தி தேவி துடித்துப் போய் விட்டாள். தன் மகனின் கை குணமானால் ராமேசுவரத்திற்கு பாதயாத்திரை வருவதாக வேண்டிக் கொண்டாள். மகன் கை குணமானது. ஆனால் அத்தாய்க்கு 88 வயதாகி விட்டது. கண் பார்வையும் முற்றிலுமாகப் பறிபோய்விட்டது. ஆனால் மகன் விடவில்லை. பெற்ற தன் தாயை 1996 முதல் 9 ஆண்டுகளாகத் தன் தோளில் சுமந்து 2005 ஏப்ரல் மாதம் 27ம் தேதி ராமேசுவரம் தீவை வந்தடைந்தார். மக்கள் அவரைக் கை தொழுது வரவேற்றனர். மகனுக்காகத் தாய், தன் தாய்க்காக மகன். 'தாரத்துக்குப்பின் தாய்' என்ற நிலையில் வாழும் மகன்களுக்கு கைலாஷ்கிரி ஒரு பாடம்.

'' தாய் என்பவள் சாய்ந்து கொள்ளப் பயன்படும் ஒரு நபர் அல்ல. சாய்வை அவசியமற்றதாகச் செய்யத்தான் தாய்.''

பெண்களின் உரிமைகளில் எல்லாம் பெரிய உரிமை ஒரு நல்ல தாயாக இருப்பதுதான். உலகில் உள்ள பாலூட்டும் உயிரினங்கள் மொத்தம் 4,327. இதில் மனித இனத்தில் மட்டுமே குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்காமல் புட்டிப்பாலை நாடுகின்றனர். இது இயற்கைக்கு முற்றிலும் முரணானது. ஓராண்டு வரை - முடிந்தால் 2 வயது வரை தாய்ப் பால் தரலாம். கிராமப் புறங்களில் 4 வயது வரை கூட தாய்பால் தரும் பழக்கம் உள்ளது.

வர்த்தக ரீதியான தாய்ப்பால் வங்கியை கலிபோர்னியா நிறுவனம் ஒன்று நிறுவியுள்ளது. புரோலாக்டா பயோ சயின்ஸ் என்ற பெயரில் இயங்கும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் எலினா மெடா கூறுகிறார்: ''தாய்ப் பாலில் கிட்டத் தட்ட ஒரு லட்சம் மூலக் கூறுகள் உள்ளன. ஆனால் நமக்குத் தெரிந்தவை சில ஆயிரங்களே.

தாய்ப்பாலைப் பதப்படுத்தி பாதுகாக்கும் வசதியும் பதப்படுத்துவதற்கு உரிய அனைத்து வசதிகளையும் கொண்ட முதல் வங்கி இதுதான். ரத்த தானம் போல தாய்ப் பாலைத் தானம் செய்யும் தனியார் வங்கிகளையும். மருத்துவனைகளையும் அணுகி அவர்களிடமிருந்து மொத்தமாகப் பால் வாங்குகிறோம். அதைப் பதப்படுத்தி பாதுகாக்கப்பட்டு மிகக் குறைந்த எடையில் பிறக்கும் குழந்தைகளுக்கும், இருதய பாதிப்பு நோய்வாய்பட்ட குழந்தைகளுக்கும் இத்தாய்ப்பால் தரப்படுகிறது'' என்றார்.

கல்லாய் இருக்கும் தெய்வத்தை விட, கருவில் சுமக்கும் தாயே நமது தெய்வம். இதை நாம் உணர்ந்தால் பெற்ற தாயை முதியோர் இல்லத்தில் சேர்க்க மாட்டோம்.

தாயின் இதயம் ஒரு மலர்; அது எப்போதும் வாடுவதில்லை.

மனநிலை பாதிக்கப்பட்ட தாயால் 25 ஆண்டுகள் வீட்டில் சிறை வைக்கப்பட்டாள் ஒரு சீனத்து சிறுமி. அவள் சமீபத்தில் மீட்கப்பட்டாள். சிறுமியின் பெயர் ஜியாஸ் வீ (16). இவரது தந்தை விவாகரத்து செய்து விட்டார். இதனால் மன நிலை பாதிக்கப்பட்ட தாய் தன் ஒரே மகளுடன் பூட்டிய வீட்டுக்குள் வாழ்ந்தாள். தன்னை யாராவது கொலை செய்து விடுவார்களோ என்ற பயம். மனநிலை பாதிக்கப்பட்ட நேரத்திலும் குழந்தையின் மீது பாசம் கொண்ட இந்தத் தாய் தெய்வத்திற்கும் மேல் அல்லவா?

நைன் என்ற அமெரிக்கப் பறவை ஒவ்வோர் இரண்டு நிமிடத்திற்கும் தன் குஞ்சுகளுக்கு உணவு அளிக்குமாம்.

சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியாக 63 வயது சபர்வால் பதவி ஏற்றதும் விழாவுக்கு வந்திருந்த தனது தாயார் ஜஸ்வந்தின் காலைத் தொட்டு வணங்கி ஆசி பெற்றார். 63 வயதானாலும் தாய்க்கு என்றும் குழந்தைதானே. ''எனது கணவர் நாட்டின் தலைமை நீதிபதியாக ஆசைப்பட்டார். அவருடைய கனவை எனது மகன் தீபாவளி திரு நாளில் நிறைவேற்றி இருக்கிறான். இந்த நாளுக்காகத்தான் நான் இதுவரை உயிருடன் காத்து இருந்தேன்!'' என்றார் அந்தத் தாய்.

பூதியா சிங் வயது 15. ஏழு மணி நேரத்தில் 65. கி. மீ தூரம் ஓடி சாதனை புரிந்துள்ளான். மக்கள் வரிசையில் நின்று அவனை வரவேற்பதைப் பார்த்து அச் சிறுவனின் தாய் சுகந்தி சிங் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். குடிசையில் பிறந்த அவன் கோபுர அளவுக்கு உயர்ந்து பல்வேறு வெளிநாட்டு டி.வி. நிறுவனங்கள் புகழ்ந்து படம் பிடித்து பத்திரிகையில் பிரசுரித்த போது அந்தத் தாய்க்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! அன்னை சிந்தும் கண்ணீரெல்லாம் பிள்ளையினால் பன்னீர் ஆனது.

பள்ளிச் சான்றிதழ், ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை என எல்லா அரசு ஆவணங்களிலும் இனி விண்ணப்பதாரரின் தந்தை பெயரில் தாயார் பெயரும் கட்டாயம் இடம் பெறும் என்று தில்லி அரசு அறிவித்துள்ளது.

கேரளத்தில் முதல் முறையாக பெண் ஐ. ஏ. எஸ் அதிகாரி ஒருவருக்கு மிக உயர்ந்த கவுரவம் கிடைத்திருக்கிறது. அந்த கவுரவத்தைப் பெற்றிருப்பவர், ஷீலா தாமஸ். முதல் மந்திரி

அச்சுதானந்தனின் முதன்மைச் செயலாளராக இவர் நியமனம் செய்யப்பட்டிருப்பது தான் அந்த கவுரவம். இதுவரை கேரளாவில் இந்தப் பதவியை எந்தப் பெண்மணியும் வகிக்கவில்லை. தாமஸ் ஜான் ஆச்சியம்மாளின் மகள் இவர். நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் "எனக்கு வழிகாட்டி என் அம்மாதான்!" என்று பெருமைபடக் கூறினார்.

தாய்ப் பாசத்தில் முதலிடம் வகிப்பது பறவை இனமா? மிருக இனமா? மனித இனமா? முதலாவது இடத்தில் பறவை இனம்தான் இருக்கிறது. இரண்டாவது இடத்தில் இருந்த மனித இனம் இன்று மூன்றவதாகத்தான் இருக்கும்.

உதாரணமாக ரென் என்ற பறவை ஒரு நாளில் மட்டும் தனது குஞ்சுகளுக்கு 1, 271 முறை இரை ஊட்டுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தாய்ப்பால் தராததால் உலகில் ஆண்டுக்கு 1.50 கோடி குழந்தைகள் இறப்பதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புட்டிப்பால் கொடுப்பதால் பல நோய்கள் ஏற்படுகின்றன என்பதைத் தாய்மார்கள் உணர வேண்டும். ஆரோக்கியமான குழந்தை ஒரு எதிர்கால நம்பிக்கை. வலுவான எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியம் காக்கப்படவேண்டியது அவசியம். எனவே, கருவுற்ற காலத்திலும், பாலூட்டும் காலத்திலும் தாய் அதிகமாகச் சத்துணவை உட்கொள்வதும் வலியுறுத்தப்படுகிறது.

பாரத யுத்தத்தை மிகப் பெருமையாகப் புத்தகங்கள் பேசுகின்றன. கண்ணனின் துணையுடன் கவுரவர்களைப் பாண்டவர்கள் வெற்றி பெற்றதை மேடை தோறும் முழங்குகிறார்கள். அநியாயத்தை வென்ற பாண்டவர்களைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். ஆனால் கவுரவர்கள் நூறு பேரும் அழிந்து போனதால் அந்தத் தாயின் மனம் எத்தனை வருத்தத்திற்கு உள்ளாகியிருக்கும்? அவள் தான் காந்தாரி. ஒரு பிள்ளையை இழந்தாலே பெற்ற மனம் துடிக்கும்... நூறு பிள்ளைகளையும் இழந்தால் ஒரு தாய்க்கு எப்படி இருக்கும்? கண்ணனுக்குச் சாபம் தந்தாள். எப்படி? என் கண்ணெதிரிலேயே அவனது வம்சம் சண்டை போட்டு அழிந்து போகட்டும் என்று!

தாய்மார்களுக்கு ஒரு நற்செய்தி. கரு நிலையிலேயே குழந்தைகளின் குறைகளைக் கண்டுபிடிப்பது, பிரசவத்துக்குப் பிறகு தாய்க்கு ஏற்படும் இடுப்புத் தசைகள் பலவீனத்தை முன் கூட்டியே கண்டு

பிடிப்பது உள்பட பல்வேறு மருத்துவ சோதனைகளில் அல்ட்ரா சவுண்ட் டாப்லர் கருவிகளின் அண்மைக் கால முன்னேற்றம் குறித்து ஆராயும் தெற்காசிய மாநாடு சென்னையில் 2006 செப்டம்பரில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளை உருவாக்கும் உண்மையான சிற்பி தாயைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. எனவே தாய் உளிகளை மிகக் கவனமாகப் பயன்படுத்தினால் அழகான - அற்புதமான - பிறரால் மதிக்கப்படும் குழந்தையாக உருவாக்க முடியும்.

''தாயில்லாப் பிள்ளை தெருவிலே, தகப்பன் இல்லாப் பிள்ளை மனையிலே'' என்பது நம் முன்னோர்களின் மூத்த மொழி. எனவே பெற்ற குழந்தையைப் பேணிக் காக்கும் விஷயத்தில் தாய்மைப் பண்புதான் முதலிடம் வகிக்கிறது.

ஒவ்வொருவருக்கும் தங்களது தாயே உயர்வானவராவார்.

''எனது தாய் ஒரு தேவதை. இரு தாய்கள் எனக்கு உண்டு. ஒருவர் என்னைப் பெற்றெடுத்து அன்பும் கருணையும் காட்டி வளர்த்த தாய். மற்றொருவர் இசை மேதை எம். எஸ் சுப்புலட்சுமி'' என்று கோவை அவிநாசிலிங்கம், மகளிர் பல்கலைக் கழக பொன் விழாவில் உருக்கமாகக் கூறினார், ஜனாதிபதி அப்துல் கலாம்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தாய் மட்டுமல்ல ஆசிரியரும் அவர்தான். வீர சிவாஜிக்கு வீட்டில் முதல் ஆசிரியர் அவர் அன்னை ஜீஜாபாய். காந்திஜிக்கு வீட்டில் முதல் ஆசிரியர் அவர் தாய் புட்லிபாய்தான். எனவே தாய்தான் ஒரே நேரத்தில் இரு பதவிகளையும் வகிப்பவராகிறார்.





அப்பா

மாதா, பிதா, குரு தெய்வம். மாதாவுக்குப்பின் பிதாவை அதாவது தந்தையை இரண்டாவது இடத்தில் வைத்து வணங்க வேண்டும் என்பது நியதி. எனவே அன்னைக்குப் பின் அப்பா தேர்வு.

தாய்க்குச் சமமாகத் தந்தையின் பொறுப்பு கொஞ்சமும் சளைத்ததல்ல. அல்லும் பகலும் பாடுபட்டு, தான் பெற்ற செல்வம் வீணாகிப் போய் விடக் கூடாது என்று சில நேரம் கோபத்தைக் காட்டுவார்கள். இது அவர்கள் மீது உள்ள அன்பின் மிகுதியால். ஆனால் நாளடைவில் அதுவே பிள்ளைகளுக்கு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது. கோபம் உள்ள இடத்தில்தான் குணம் இருக்கும் என்பதை பிள்ளைகள் - குறிப்பாக ஆண் பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜூன் மாதம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை ஃபாதர்ஸ் டே. இப்படியும் ஒரு தினம் இருப்பதாக அதிக பிள்ளைகளுக்குத் தெரியாது. அன்னையர் தினம், மகளிர் தினம், காதலர் தினம் இவற்றை மறக்காமல் கொண்டாடும் நாம் தந்தை தினத்தை மட்டும் மறந்து போகிறோம். இப்போதுதான் இதில் விழிப்புணர்வு வந்துள்ளது.

'பாபா' எனும் லத்தின் சொல்லுக்குத் தந்தை என்று பொருள். ரோமன் கத்தோலிக்கர்களின் புனித தந்தையாக போற்றப்படும் போப், பாபா என்றழைக்கப்படுகிறார். 'பாபா' எனும் வார்த்தையிலிருந்து உருவானது 'போப்' என்னும் சொல்.

நீங்கள் அறிந்தது ஒரு தந்தை தான். இதில் எண்ணற்ற தந்தைகளை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்.

'' உப்பின் பெருமை அது இல்லாத போதுதான் தெரியும். அப்பன் பெருமை அவன் செத்தால் புரியும்'' என்பார்கள்.

ஒரு குழந்தைக்கு உணவு, உடை, இருப்பிடம் கல்வி நல்வாழ்க்கை அமைத்துத் தர வேண்டியது ஒரு தந்தையின் கடமையாகும். சிறந்த தந்தையின் கடமை, அவனுக்கு மீன் வாங்கித் தரும் தந்தையாக இருப்பதை விட மீன் பிடிக்க கற்றுத் தருவதாக இருக்க வேண்டும். தக்க வயதில் தன் மகனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்காத தந்தை அவனுக்குத் திருட்டை கற்பித்ததற்குச் சமம்.

பொறுப்பு மிக்க தந்தை நூறு ஆசான்களுக்கு ஒப்பானவர். சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழும் வழியைத் தன் பிள்ளைகளுக்குக் கற்றுத் தரும் தந்தை அளவற்ற செல்வத்தை விட்டுச் சென்ற தந்தையைவிட மேலானவர்.

பெற்று விட்டதால் மட்டும் ஒருவன் அப்பாவாக ஆகி விட முடியாது. பெற்ற பிள்ளைகளைப் பேணி வளர்க்க வேண்டும். ஒரு அப்பாவுக்கு குழந்தைகள் கிடைப்பது சுலபம். ஆனால் ஒரு குழந்தைக்கு நல்ல அப்பா கிடைப்பதுதான் கடினம்.

பிள்ளைகள் தந்தையின் அறிவுரைகளை விட அவர்களின் செயல்பாடுகளைத் தான் கூர்ந்து கவனிக்கிறார்கள். எனவே, ஒருவரை ஒருவர் மதிப்பது, மற்றவர்களை இழிவாகப் பேசாதிருப்பது, புகை மது அருந்தாதிருப்பது, சண்டையிடாதிருப்பது போன்றவற்றைக் கண்டிப்பாகக் குழந்தைகள் முன் அப்பாக்கள் தவிர்க்க வேண்டும்.

''தன் குழந்தை மிக உயர்ந்த நிலைக்கு வரும்போது 'இவன் தந்தை என்நோற்றான் கொல் - என்ன தவம் செய்தானோ!' - என்று ஊரார் கொண்டாடும் போது தந்தை மனம் குளிர்கிறது.

சராசரி தந்தையரின் சாதனை வீட்டோடு சரி. ஆனால் சாதனை படைத்தவர்களின் முகமும் அகமும் மூழ்கி எடுத்த நல் முத்துக்கள். அவரது சாதனை ஒரு தேசத்திற்கே திசை காட்டியாகத் திகழ்கின்றது.

முதல் குழந்தை ஒரு தந்தையின் முதல் நண்பன். குழந்தைகளுக்குப் பொருள் தேடிவைப்பதை விட நல்லொழுக்கங்களைப் பழக்கி பைப்பதே தந்தை தேடிவைக்கும் உண்மையான செல்வமாகும்.

தந்தை தம் பிள்ளைக்கு அளிக்கும் மாபெரும் பரிசுகளில் ஒன்று நல்லொழுக்கம். அறிவுள்ள தந்தைக்கு தன் மகனைப் பற்றி நன்கு

தெரியும். தன்பிள்ளை என்ன செய்கிறான் - யாருடன் பழகுகிறான் என அவனது நடவடிக்கைகளை அளவுடன் அறிந்திருப்பது ஒரு தந்தையின் இன்றியமையாத கடமையாகும்.

"டேய் படிடா, படிச்சாத்தாண்டா வாழ்க்கை" என்று அறிவுறுத்தும் பாசமும் பொறுப்பும் கொண்ட ஒரு குரல் - அது தந்தையின் குரல்தான். இதற்குப் பிறகும் அவன் உணரவில்லை என்றால் அது விதி விட்ட வழிதான். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

மகாபாரதத்தில் ஒரு காட்சி. துரியோதனனுக்குப் புத்தி சொல்லிச் சொல்லி சலித்துப் போன விதுரர் அவரது ஒரு நிலைமையைக் கேவலப்படுத்திய போது வில்லை முறித்துப் போட்டு விட்டு விதியை நொந்தபடி போனாராம். உருப்படாத பிள்ளைகளைப் பார்த்து சில குடும்பங்களில் தந்தை விதுரர் போல நொந்து கொள்வதுண்டு.

'குழந்தைகள் இழைக்கும் தவறுகளையும் குற்றங்களையும் வெறுக்கும் தந்தைதான் அவர்களை உண்மையிலேயே நேசிப்பவர்' என்று கூறுகிறது, பிரெஞ்சுப் பழமொழி.

அமெரிக்க எழுத்தாளர் மார்க்டுவைன் சொன்னார், "எனக்கு 14 வயது இருக்கும் போது, என் அப்பாவுக்கு ஒன்றுமே தெரியாது, வெகுளி என நினைத்திருந்தேன். 21 வயதாகும்போது என் அப்பாவுக்கு எல்லா விஷயமும் தெரியும் என நினைத்தேன். யோசித்த பிறகே எனக்கு ஓர் உண்மை புரிந்தது. அதாவது இந்த 7 ஆண்டுகளில்தான் என் அப்பாவை நான் புரிந்து கொண்டேன்" என்று. சில பிள்ளைகள் 27 ஆண்டுகள் ஆனாலும் புரிந்துகொள்வதில்லை.

டிபார்ட்மெண்டல் ஸ்டோர். அப்பாவும் மகனும் நுழைந்து பொருள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினர். வழியில் பையன் ஸ்டோரில் ஒரு பொருளை எடுத்து மறைத்து வந்ததை தந்தையிடம் காட்ட, உடனே அந்த இடத்தில் மகனைக் கண்டிக்காமல் மறுபடியும் ஸ்டோருக்குக் கூட்டி வந்து, கடை முதலாளியிடம் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கச் சொன்னார்.

'எதையும் காசு கொடுத்துதான் வாங்க வேண்டும்' என்ற எண்ணத்தை அவன் பிஞ்சு மனதிலே ஊன்றச் செய்தார். "அப்படி நான் செய்யாதிருந்தால் இம்முறை திருடியவனை மீண்டும் திருடத் தூண்டும். 'அதையே தொடர்ந்து திருடினால் என்ன?' என்ற எண்ணம் அவன் ஆழ்மனதிலே ஆழமாக ஊன்றிவிடும். ஆரம்பத்திலேயே அதைக்

கிள்ளி எறிந்து விட்டால், அவன் புரிந்துகொள்ளும்படிச் செய்து விட்டால், நாளை ஒரு நல்ல குடிமகனை உருவாக்க முடியும்'' என்றார் அந்த தந்தை.

முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான் கென்னடியின் தந்தை ஜோசப் கென்னடி. தன் பிள்ளைகளுக்கு சொல்லித் தந்த பாடம், ''குறைந்தபட்சம் உன்னால் காப்டனாகக் கூட முடியாது என்றால் விளையாடப் போகாதே'' என்பாராம்.

பெங்களூர் விக்னேஷ் ஆறரை வயதுக்குள் கராத்தேயில் 'பிளாக் பெல்ட்' வாங்கி உலக சாதனை புரிந்துள்ளான். அவனது அப்பா ரமேஷும் கராத்தே மாஸ்டர். இரண்டு வயதிலேயே ரமேஷுக்கு கராத்தே ஆர்வத்தை ஊட்டியுள்ளார் .

மரபியல் முறைப்படி தந்தையின் குணம்தான் தனயனுக்கும் வரும். பிரான்ஸில் லூயில் ஹென்றிடி போர்பன் (கி.பி. 1700) வேட்டைக்குச் செல்லும் போது தன் இடது கண்ணை இழந்து விட்டார். அதற்குப் பிறகு அவருக்குப் பிறந்த 5 ஆண்குழந்தைகளுக்கும் இடதுகண் இல்லை.

'தாயைப் போலப் பிள்ளை நூலைப் போல சேலை' என்பது போல தந்தைக்குள்ள அறிவு, ஆற்றல், இசை, ஈகை, உழைப்பு, ஊக்கம், எளிமை, ஒழுக்கம், கல்வி, கிரியேடிவிடி குணம், சக்தி, சாதனை, சிந்தனை தான் பிள்ளைக்கும் வரும் என்பதை ஒரு தந்தை மறக்கக்கூடாது.

நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி சொன்னார், ''நான் தினமும் யோகா, உடற்பயிற்சி, தியானம், பிராணாயாமம் செய்து வருகிறேன். இது என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்த நல்ல பழக்கம். நான் ஆரோக்கியமாக இருப்பதற்கு இதுவே காரணம்'' என்றார்.

பிள்ளைக்குத் தந்தை ஒருவன்; நம் எல்லோருக்கும் தந்தை இறைவன். ஒரு தந்தை பத்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியும் ஆனால் அந்தப் பத்துக் குழந்தைகள் ஒரு தந்தையைக் காப்பாற்றுமா என்றால் சந்தேகம்தான். இதற்கு விடை முதியோர் இல்லங்களுக்குச் சென்றால் கிடைக்கும்.

ஆங்கில அகராதியைத் தொகுத்த சாமுவேல் ஜான்சனின் அப்பா பழைய புத்தக வியாபாரி. அப்பா செய்யும் தொழிலை வெளியில்

சொல்ல மகனுக்கு அவமானம். கடையைச் சிறிது நேரம் பார்த்துக் கொள் என்பார். அதை அவமானமாகக் கருதி ஊரைவிட்டே ஓடிவிட்டார். பெரிய எழுத்தாளராகிப் பேரும் புகழும் பெற்று 50 ஆண்டுகள் கழித்து ஒரு பாராட்டு விழாவிற்காகச் சொந்த ஊர் வந்தார். அப்பா வேலை செய்த பழைய புத்தகக் கடையில் இரண்டு மணி நேரம் வேலை செய்து பார்த்தார். மறைந்த தன் தந்தை எத்தனை கஷ்டப்பட்டு உழைத்துள்ளார் என்ற அருமை பெருமை உணர்ந்து கண்ணீர் விட்டு அழுதாராம்.

ஜப்பான், அமெரிக்கா, இந்தியாவைச் சேர்ந்த மூன்று நாட்டு சிறுவர்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடி தங்கள் தங்கள் தந்தையின் அருமை பெருமைகளைச் சொல்லிக் கொண்டார்கள்.

"வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு, அதன் இலக்கை அடைவதற்குள் என் அப்பா அந்த இடத்தில் இருப்பார்" என்றான், ஜப்பான்சிறுவன்.

"துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு அதன் இலக்கை அடைவதற்குள் அந்த இடத்தில் இருப்பார்" என்றான், அமெரிக்கச் சிறுவன்.

"பூ! இதென்ன பிரமாதம். எங்க அப்பாவுக்கு ஆபிஸ் ஐந்து மணிக்குதான் முடியும். ஆனால் நான்கு மணிக்கே என் அப்பா வீட்டில் இருப்பார்" என்றானாம் இந்தியச் சிறுவன்.

தன் மகன் உமாபூனுக்காகத் தன் உயிரையே கொடுத்தார் பாபர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!' என்றார்கள் நம் முன்னோர்கள்.

அன்னை அன்பு என்றால் அப்பாவை அறிவு என்கிறோம். அதனால்தான் கண்டுபிடிப்புக்கு அப்பாவை இணைத்துக் கூறுகிறோம்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ரோல் மாடல் தன் தந்தைதான்.

சுப்ரியா சாகு ஐ .ஏ. எஸ் அவர்கள், முதலில் ஐ. ஏ. எஸ் தேர்வு பெற்றபோது, நிருபர்கள் "உங்கள் ரோல் மாடல் யார்?" என கேட்ட போது, "என் வாழ்க்கையில் ரோல் மாடல் என் தந்தை ராம் ஆஷ்ரே ஐ.ஏ.எஸ். தான்" என்றார். உண்மைதான் ஐ. ஏ. எஸ் மகன் ஐ. ஏ. எஸ்.

பல லட்சங்களை - கோடிகளை விட்டுச் சென்ற தந்தையை விட ஒரு லட்சியத்தைத் தனக்குப் பின் விட்டுச் செல்பவரே சிறந்த தந்தை.

NN - கேபிள் நியூஸ் நெட் ஒர்க்ஸ் நிறுவனர் டெட்டர்னர் உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவர் . இவருடைய அப்பா எட்டர்னருக்கு

தன் மகன் டெட்டர்னர் மீது அளவற்ற அன்பு. ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார். தற்கொலை செய்து கொள்வதற்கு ஒரு வாரத்திற்கு முன் தன் மருமகனிடம், '' நான் ஏன் அவனை பாடாய்ப்படுத்துகிறேன் தெரியுமா? அவன் ஒரு பெரிய ஆளாய் - ஒரு லட்சியவாதியாய் வரணும், அதுக்குத்தான்!'' என்றாராம்!

1988-ல் சியோல் ஒலிம்பிக்கில் இந்தியாவின் சார்பில் 152 கிலோ எடைப் பிரிவில் 102.5 கிலோ பளுவைத் தூக்கிப் புதிய சாதனை படைத்த கோவில் பட்டி முத்துச்சாமி மகள்கள் மகேஸ்வரி, சுதா இருவரையும் பளுதூக்கும் வீராங்கனைகளாக்கி உலக சாதனை படைக்க வேண்டும் என்பது தந்தையின் தாகம். அந்த தாகத்தில் பாதி பூர்த்தியானது.

முன்னாள் ஹெவி வெயிட் சாம்பியானான லயான் ஸ்பிங்க்ஸ் மகன் உலகக் குத்துச் சண்டை சங்கத்தின் வெயிட் சாம்பியன் பட்டம் பெற்றார். லாஸ் வேகஸில் நடைபெற்ற போட்டியில் மெக்கிகோவின் மிகேல் ஏஞ்சல் கோன்சலஸை வென்றார், ஸ்பிங்க்ஸ். எனவே தந்தையின் அடிச்சுவடுதான் தனயனுக்கும் வரும்.

பொதுவாக ஒரே குடும்பத்தில் தந்தை வழியில் மகன் அல்லது மகள் நடந்து கொள்வது இயல்பாக நடைபெறும் செயலாகும். குறிப்பாக தேர்ந்தெடுத்த தொழில் அல்லது வியாபாரத்தை மகன் அல்லது மகள் தொடர்ந்து செய்வது வாடிக்கை. சமீப காலமாக நடிகர் நடிகைகளின் வாரிசுகள் தங்கள் பெற்றோரைப் பின்பற்றி சினிமா உலகுக்கு வருவது அதிகரித்துள்ளது. 'வரலாற்றுக் குற்றங்களுக்குப் பழி தீர்ப்போம்!' என்று இன்று பலர் புறப்பட்டுள்ளனர். ஆனால் தந்தை அளித்து விட்ட இரண்டு வரங்களுக்காக அரச பதவியையே துறந்து விட்டு ஈரேழு ஆண்டுகள் வனவாசம் ஏகிய தியாக புருஷர், ராமர்.

இங்கிலாந்தில் எலிசபெத் பிளாக் வெல் என்றால், இங்கே தமிழகத்தில் முத்துலட்சுமி அம்மையார் என்று அர்த்தம். அந்தக் காலத்தில் பெண்கள் மேல் படிப்புப் படிக்க பல தடங்கல்கள் இருந்தது. ஆனால் முத்துலட்சுமி சோர்ந்து மூலையில் முடங்கி விடவில்லை. தன் தந்தையிடமே படித்து தேர்ச்சி பெற்றார். பின் மருத்துவக் கல்லூரியில் முதல் பெண்மணியாகத் திகழ்ந்தார். பிறகு லண்டன் சென்று மருத்துவப் பயிற்சி பெற்றார். 1917ல் இந்திய பெண்டிர் கழகத்தைத் தொடங்கினார். 'பெற்று விட்டால் மட்டும் போதாது. தந்தை பிள்ளைக்கு கடைசி வரை தந்தையாகவும், குருவுக்கு குருவாகவும் இருக்க வேண்டும்.'

உலகில் எந்த ஒரு அப்பாவும் தன் மகன் கெட்டுப் போக வேண்டும் என்று நினைப்பதில்லை. மகன் நன்றாக வர வேண்டும் என்ற ஆசையில் சில நேரங்களில் ஒரு அப்பா எடுக்கும் முயற்சி தப்பாகப் போவதுண்டு. அதாவது நீ ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் உன் அப்பாவின் அறிவுரையை விடச் சிறந்ததில்லை.

நம் மக்கள் நன்னெறிகளில் நடந்து எளிய வாழ்க்கையில் உயரிய சிந்தனைகளுடன் வாழ 'நம் தேசத்தந்தை' வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். அரசு இல்லாமலேயே பல பயனுள்ள காரியங்களை மக்களே செய்து வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

காந்திஜியின் அரிய கண்டுபிடிப்பான வார்தா கழிப்பறை, ஓர் அருமையான இயற்கை உரத்தயாரிப்பு நிலையமாகவும் இருந்தது. சுற்றுச் சூழலும் மாசுபடாமல் இருந்தது. இயற்கை வைத்தியம், மண் சட்டி உபவாசம், சத்துணவு வகைகளை மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்து ஆரோக்கியமாக வாழ உபதேசித்தார். அதனால்தான் அவரை 'தேசத் தந்தை' என்கிறோம். நாம் நம் திருநாட்டை தாய் நாடு என்று அழைக்கிறோம். ஆனால் ஜெர்மனியர்கள் தந்தை நாடு என்று அழைக்கிறார்கள்.

சர்வதேசத் தந்தையர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3ஆவது ஞாயிறுக்கிழமை கொண்டாடப்படுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் வில்லியம் ஸ்மார்ட். உள் நாட்டு போர் வீரர். அவரது மனைவிக்கு ஆறு குழந்தைகள். ஆறாவது பிரசவத்தின் போது குழந்தையைப் பார்த்து விட்டு அவரது மனைவி இறந்து விட்டாள். ஆறு குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு ஸ்மார்ட் தலையில் விழுந்தது. உடனே தன் போர்வீரர் பதவியை விட்டு விலகினார். மறுமணம் செய்து கொள்ளாமல் தனி ஆளாக இருந்து ஆறு குழந்தைகளையும் வளர்த்து படிக்கவைத்து நல்ல முறையில் அந்த ஆறு குழந்தைகளுக்குத் திருமணமும் செய்து வைத்தார். அந்த ஆறு குழந்தைகளில் ஒருவர் தான் 'திருமதி ஜான் . பி. டோட்'. தன் தந்தையின் தன்னலமற்ற தியாகத்தை உணர்த்தும் நன்றிக் கடனாகத்தான் தந்தையர் தினத்தை முதன் முதலாக ஜூன் 19, 1910ல் அமெரிக்காவில் கொண்டாடினார்.

1924-ல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் தேசிய தந்தையர் தினம் கொண்டாடுவதை ஆதரித்தார். 1966-ல் அமெரிக்க ஜனாதிபதியாக லிண்டன் ஜான்சன் பதவியேற்றார். ஜூன்